## ஈரோடு வடக்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட வி.பி.சண்முகசுந்தரம் மறைவெய்திய காரணத்தால்; ஈரோடு வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 3 (வியாழக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

ஈரோடு வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு கோ.வெ.குமணன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**ஈரோடு வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக, திரு. கோ.வெ.குமணன்,** 8பி, திருநகர், கோபிசெட்டிபாளையம்-638 452, ஈரோடு மாவட்டம்

அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 03-10-2024.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

# ஈரோடு வடக்கு மாவட்டம்

# பேரூர்க் கழகத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்

# தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15 ஆவது பொதுத்தேர்தலில் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள நம்பியூர் ஒன்றியம், நம்பியூர் பேரூர் துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்) தேர்ந்தெடுக்கப்பட்ட கே.சந்திரன், மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.கே.பழனியப்பன் - அந்தியூர் ஒன்றியம், அத்தாணி பேரூர் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எம்.சுப்பிரமணியன் -தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம், காசிபாளையம் பேரூர் அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.மகாதேவன் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால் ஈரோடு வடக்கு மாவட்டம், நம்பியூர் பேரூர் துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்), மாவட்டப் பிரதிநிதி - அத்தாணி பேரூர் பொருளாளர் - காசிபாளையம் பேரூர் அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, 2024 அக்டோபர் 3 (வியாழக்கிழமை) அன்று ஒரு பொறுப்புக்கு ரூ.500/- வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள நம்பியூர் ஒன்றியம், நம்பியூர் பேரூர் துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்) பொறுப்புக்கு சி.நடராஜன் அவர்கள், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கு ஏ.நல்லசாமி அவர்கள் - அந்தியூர் ஒன்றியம், அத்தாணி பேரூர் பொருளாளர் பொறுப்புக்கு டி. திருமுருகன் அவர்கள் - தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம், காசிபாளையம் பேரூர் அவைத்தலைவர் பொறுப்புக்கு மு.கந்தசாமி அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**ஈரோடு வடக்கு மாவட்டம்,**
**நம்பியூர் ஒன்றியம்,**
**நம்பியூர் பேரூர் துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்)**

**திரு. சி.நடராஜன்,** 101/48, அம்பேத்கார் வீதி (நகர்), ந.வெள்ளாளபாளையம், கெடாரை அஞ்சல், நம்பியூர் தாலுகா, ஈரோடு வடக்கு மாவட்டம் 638 458. அவர்களும்,

**நம்பியூர் பேரூர், மாவட்ட பிரதிநிதியாக**

**திரு. ஏ.நல்லசாமி,** 31/17, பங்களா வீதி, நம்பியூர் (அஞ்சல்), ஈரோடு வடக்கு மாவட்டம் 638 458 அவர்களும்

**அந்தியூர் ஒன்றியம், அத்தாணி பேரூர் பொருளாளராக**

**திரு. டி. திருமுருகன்,** 10, அங்காளம்மன் கோவில் வீதி, அத்தாணி- 638 502, அந்தியூர் தாலுகா, ஈரோடு வடக்கு மாவட்டம் அவர்களும்

**தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம்,**
**காசிபாளையம் பேரூர் அவைத்தலைவராக**

**திரு. மு. கந்தசாமி,** 9, ஈஸ்வரமூர்த்தி வீதி, காசிபாளையம் & அஞ்சல், கோபி தாலுகா, ஈரோடு வடக்கு மாவட்டம்-638 454

அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.


**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 03-10-2024.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. திருஞானசம்பந்தம்

### அக்டோபர் 5 (1983)



**காளையார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.**

**பாகனேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1968 முதல் 1974 வரை தமிழக சட்டமன்ற மேலவையில் கழக உறுப்பினராக பணியாற்றியவர்.**

**1966ஆம் ஆண்டு சிவகங்கையில் நடைபெற்ற ஒன்றுபட்ட இராமநாதபுரம் – மதுரை மாவட்டங்களின் கழக மாநாட்டில் தொண்டர்படைத் தலைவராக பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று 1963 முதல் 1965 வரை சிறையிலிருந்தவர். விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**‘கழகம் வளர்த்த கருப்பு தங்கம்’ என அப்பகுதி கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கள்ளக்குறிச்சி மாவட்டம் - நீலமங்கலத்தில் மாவட்ட அளவில்

# முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் - பரிசு!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கள்ளக்குறிச்சி, அக். 5 -

கள்ளக்குறிச்சி மாவட்டம் நீலமங்கலம் தனியார் பள்ளி கலையரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தி யம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில் 30.9.2024 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இதன் பின்னர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசுகையில்:

தமிழக அரசு உத்தரவின் படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கள்ளக்குறிச்சி மாவட்டம் சார்பில் முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 10.09.2024 முதல் தொடங்கி 24.09.2024 வரை நடைபெற்றது. இதில் கால்பந்து, கைப்பந்து, தடகளம், நீச்சல், சதுரங்கம், கபாடி, சிலம்பம் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டிகள் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர், அரசு ஊழியர்கள், பொதுமக்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 5 பிரிவின ருக்கு நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் 16,000 நபர்கள் கலந்து கொண்டனர்.

அந்த வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் இன்றைய தினம் வழங்கப் பட்டுள்ளது. இப்போட்டிகளில் மாவட்ட அளவில் முறையே 675 நபர்களுக்கு முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

பரிசுத்தொகையாக முறையே ரூ.3,000/, ரூ.2,000/, ரூ.1,000/ மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான போட்டிகளில் தனிநபர் பிரிவில் முதலிடம் பெற்றவர்களும், குழுப் போட்டிகளில் தேர்வு குழுவால் தேர்வு செய்யப்பட்ட அணியும் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளனர்.

இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளில் உள்ள நன்மைகள் வாழ்க்கைக்கு உதவும்.

ஏனெனில் வெற்றியை விட தோல்வியை எதிர்கொள்வது தான் முக்கிய மானதாகும். விளையாட் டில் வெற்றியை மட்டுமே கொண்டாடி வருகிறார்கள். தற்போதைய இளைய சமுதாயத்தினர் தோல்வியை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தெரியாமல் உள்ளார்கள். தோல்வியே வெற்றிக்கு முதல்படி.

எனவே தோல்வி ஏற்படும் பொழுது அதனை கண்டு துவண்டு விடாமல் தோல்வியை எதிர்கொண்டு வெற்றி பெற இன்றைய இளைஞர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதேபோன்று வாழ்க்கையில் எத்தகைய இடர்ப்பாடுகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு அடுத்த நிலைக்கு போகவேண்டும் என்ற எண்ணம் இளைஞர்களுக்கு தோன்ற வேண்டும். மேலும் இப்போட்டியில் வெற்றி பெற்ற அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம் என்று பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் புவனேஸ்வரி பெருமாள், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கே.கார்த்திகா, மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆர்.சுரேஷ் குமார், ஒன்றியக் குழுத் தலைவர்கள் தாமோதரன் (தியாகதுருகம்), சத்தியமூர்த்தி (சின்ன சேலம்), தியாகதுருகம் பேரூராட்சித் தலைவர் வீராசாமி, நீலமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் ஜெய்சங்கர் மற்றும் அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாநகர முன்னாள் அவைத்தலைவர்

# கே.சென்னியப்பன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி !

*ஈரோடு, அக். 5 -*

*ஈரோடு முன்னாள் மாநகர அவைத்தலைவர் கே. சென்னியப்பன், வயது 84, வயது மூப்பின் காரணமாக 3.10.2024 வியாழக்கிழமை அன்று காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.*

*சென்னியப்பனுக்கு சிவன் , அசோக் என்ற இரு மகன்களும், 4 மகள்களும் உள்ளனர்.*

*சென்னியப்பன் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் நடக்கும் அனைத்து கழக நிகழ்ச்சிகளுக்கும் மேடை அமைத்தல், சாலைகளில் கழக கொடி கட்டுதல் போன்ற பணிகளையும் மற்றும் கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.*



*அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.*

*அன்னாரின் இறுதி சடங்கு 3.10.2024 வியாழக்கிழமையன்று ஈரோடு காவிரி கரையில் உள்ள ஆத்மாவில் நடைபெற்றது.*

## வேதாரண்யம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# உதயம் வே.முருகையன் தாயார் வே.இராமலெட்சுமி அம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*நாகை., அக். 5 -*

*நாகை மாவட்டம் வேதாரண்யம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் உதயம் வே.முருகையன் தாயார் வே.இராமலெட்சுமி அம்மையார் (வயது 82) இயற்கை எய்தினர் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த வே.இராமலெட்சுமிக்கு மகன்கள் உதயம் வே. முருகையன், வே.இராசு, வே.பன்னீர் செல்வம், வெ.ஐயப்பன், வேதை. கண்ணன் மகள் முத்துலெட்சுமி தியாக ராஜன், மாலதி பழனிவேல் ஆகியோர் உள்ளனர். வேதாரண்யம் ஒன்றியம் மருதூர் தெற்கு பூவ*



*தேவன்காடு பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மறைந்த வே.இராமலெட்சுமி அம்மையார் உடலுக்கு நாகை மாவட்டக் கழக செயலாளர் என். கௌதமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.*

## சென்னை தெற்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், சென்னை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலப்பாக்கம் கு.சண்முகம் மறைவெய்திய காரணத்தால்; சென்னை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

சென்னை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு எஸ். அருணாசலம் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**சென்னை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக,**
**திரு. எஸ். அருணாசலம்,** 15, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை 600 116.

அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 03-10-2024.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

# ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் நகர அவைத்தலைவர் மற்றும் துணைச் செயலாளர் (பொது) ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜி.மணி - துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட பி.மெய்யழகன் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்; ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவர் மற்றும் துணைச் செயலாளர் (பொது) ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.1000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். ” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவர் பொறுப்புக்கு எஸ்.சுரேஷ் அவர்கள் கோபிசெட்டிபாளையம் நகர துணைச் செயலாளர் (பொது) பொறுப்புக்கு திருமதி நித்யா அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**ஈரோடு வடக்கு மாவட்டம்,**
**கோபிசெட்டிபாளையம் நகர அவைத்தலைவராக**

**திரு. எஸ்.சுரேஷ்,** 4, சுப்பிரமணியம் வீதி, மொடச்சூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு வடக்கு மாவட்டம் -638 476. அவர்களும்,

**கோபிசெட்டிபாளையம் நகர துணைச் செயலாளராக (பொது)**

**திருமதி. என்.நித்யா,** க/பெ. பி.மெய்யழகன், 11/31சி, கமலா ரைஸ் மில் வீதி-2, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம், ஈரோடு வடக்கு மாவட்டம்

அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.


**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 03-10-2024.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே.எஸ்.வாசன்

### அக்டோபர் 3 (2013)



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**கும்பகோணம் நகரத்தில் வார்டு கிளைச் செயலாளர், நகர அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**குடந்தை நகர வீடு கட்டும் சங்கத்தில் துணைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**